# பாராளுமன்ற கண்காணிப்புக் குழுக்களை வலுப்படுத்தல் செயற்திட்டம் 2011

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2011 சனவரி 01 இலிருந்து 2011 யூலை 31 வரையான கணக்கீட்டு காலத்திற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2011 யூலை 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) விசேட (டொலர்) கணக்கிலிருந்து பற்றல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் 2011 சனவரி 01 இலிருந்து 2011 யூலை 31 வரையான காலத்தின் போது செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 யூலை 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவுக்கூற்றுக்களின் மீது நியாயமாக நம்பிக்கை கொள்ளலாம் என்றும்

(உ) முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) மானிய உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்விற்குட்பட்ட ஏழு மாத காலத்திற்கான செயற்திட்டச் செலவுகள் ரூபா 908,297 ஆக இருந்ததுடன் 2011 யூலை 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 15,642,617 ஆக இருந்தது. மீளாய்விற்குட்பட்ட காலத்திற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு, 2011 யூலை 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| நடவடிக்கை | 2011 சனவரி 01 இலிருந்து 2011 யூலை 31 வரையான காலத்திற்கான செலவு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு | 2011 யூலை 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆலோசனை சேவைகள் | - | 9,398,899 | 9,398,899 |
| பொருட்கள் | 833,299 | 174,999 | 1,008,298 |
| பயிற்சியும் செயலமர்வும் | 74,998 | 5,160,422 | 5,235,420 |
| மொத்தம் | 908,297 | 14,734,320 | 15,642,617 |

### 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2011 யூலை 31 இல் முடிவடைந்த ஏழு மாத காலத்தின் போது விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூஎஸ் **டொலர்** | யூஎஸ் **டொலர்** |
|---|---|---|
| 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 191,271.95 | 21,222,193 |
| கழி :- | | |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 268,394 |
| பற்றுதல்கள் | - | 908,298 |
| 2011 யூலை 31 இல் உள்ளவாறான மீதி | 191,271.95 | 20,045,501 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 15 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 0.91 மில்லியன் மாத்திரம் செயற்திட்டம் தொடர்பாகச் செலவு செய்யப்பட்டிருந்த அதே வேளை 93.93 சதவீதத்திற்குச் சமமான குறிப்பிடதக்க அளவான தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகள் 2011 யூலை 14 ஆந் திகதி பூர்த்தியடைந்திருந்தது. செயற்திட்டம் தொடர்பாக இடம்பெற்ற உரிய செலவுகள் நிதிகளின் பாவனைக் கூற்றினூடக செயற்திட்டத்தினால் 2011 யூன் 30 இல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நிதிகளின் பாவனைக் கூற்றின் பிரகாரம் உள்ளபடியான செலவுகள் ரூபா 15,854,500 ஆகக் காணப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2011 யூலை 31 இல் உள்ளவாறான ஐந்தொகை செலவுகளாக ரூபா 15,642,617 தொகையினை வெளிப்படுத்தியிருந்தது. மேற்கூறிய ஆவணங்களின் இணக்கமானது ஐந்தொகையில் ரூபா 211,883 தொகையான குறைத்துக் கூறலினை வெளிப்படுத்தியது.

(இ) செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் நான்கு நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. ஆலோசனை சேவைகள், பொருட்கள், பயிற்சியும் செயலமர்வுகளும் என்பவற்றிற்கு முறையே யுஎஸ் டொலர் 284,000 யூஎஸ் டொலர் 10,000 மற்றும் யூஎஸ் டொலர் 200,000 செலுத்தப்பட்டிருந்தன. 2010 யூன் 01 ஆந் திகதியிலிருந்து ஆலோசனை சேவைகள் வழங்கப்படாதிருந்த போதிலும் ஆலோசகர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட காலத்தினை நீடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலினை நிராகரித்த உலக வங்கிப் பிரதிநிதி, செயற்திட்ட நடவடிக்கைகள் அதனது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் செயற்திட்டத்தினை 2011 யூலை 01 அளவில் பூர்த்தி செய்வதற்கு சிபார்சு செய்திருந்தார்.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தினால் நிதிகளைப் பயன்படுத்துதல் கூற்றின் பிரகாரம் செயற்திட்டத்தின் 4 கூறுகளுக்கு செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50,472,000 தொகையில் ரூபா 15,854,500 அல்லது மூல ஒதுக்கீட்டில் 31.41% மாத்திரம் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.விபரம் கீழே தரப்படுகின்றன.

| | பாதீடு | உள்ளபடியானவை | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) | % |
| குழு செயலகத்தின் இயலுமையினை மேம்படுத்தல் | 24,704.4 | 9,079.6 | 15,624.8 | 66.27 |
| குழு அங்கத்தவர்களின் இயலுமையினை வலுப்படுத்தல் | 20,551.2 | 5,838.2 | 14,713.0 | 71.59 |
| பாராளுமன்ற கண்காணிப்புக் குழு தொடர்பான தகவல்களை பொது மக்கள் அணுகுதலினை மேம்படுத்துதல் | 4,837.4 | 776.7 | 4,060.7 | 83.97 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 379.0 | 160.0 | 219.0 | 57.78 |
| மொத்த செயறதிட்டச் செலவு | 50,472 | 15,854.5 | 38,579.1 | 76.44 |

❖ ஆலோசகரின் சம்பளத்தினைச் சேர்த்ததன் காரணமாக இத் தொகையானது இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டிருந்தது.

### 4.2 பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 04 பிரதான கூறுகளின் கீழ் மேற்கொண்டிருந்த போதிலும் ஒவ்வொரு கூறின் கீழ் இலக்குகளை அடைந்து கொள்வதின் விபரத்தினை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.